செய்தி வெளியீடு எண் : 1203 நாள் : 19.06.2023

# மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றுது.

இன்று (19.06.2023) சென்னை, தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் அனைத்து தலைமை பொறியாளர்களுடன், ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகக் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் திரு.ரா.மணிவண்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மின்தேவை குறித்து மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.

ஆய்வின் போது அனல், புனல் மற்றும் எரிவாயு மின் உற்பத்தி நிலையங்களின் மூலமாக உற்பத்தி செய்யக்கூடிய மொத்த மின்சாரத்தின் அளவு குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும் நடைபெற்று வரும் மின் உற்பத்தி திட்டங்கள் மற்றும் மின் தொடரமைப்பு திட்டங்கள் பற்றியும் ஆய்வு செய்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டு மக்களுக்கு தேவைப்படும் மின்சாரத்தின் மொத்த தேவையினை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழ்நாட்டு மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க அலுவலர்களிடம் மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சட்டமன்றத்தில் ஏரிசக்தித் துறை சார்பாக அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் குறித்தும் விரிவான ஆய்வினை மேற்கொண்டார். மின்னகத்தின் சேவையை ஆய்வு செய்து, மின்நுகர்வோர்களின் குறைகளை உடனுக்குடன் சரிசெய்ய அறிவுறுத்தினார்.

எதிர்வரும் பருவமழை குறித்து மின்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் சீரான மின் விநியோகம் வழங்குவது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள காணொலி மூலம் மண்டல தலைமை பொறியாளர்களை கேட்டுகொண்டார்.

பின்னர் மின்னகத்தை நேரில் சென்று ஆய்வு செய்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in